பாடம் 3

# ஓடியவன் திரும்புதல்

***உன் படுக்கையை யாரேனும் அடிகுபடுத்தி, உனது அறையை நன்றாகச் சுத்தம்செய்து நீ செய்யவேண்டிய வேலைகளை யாரோ ஒருவர் செய்தால் உனக்கு எப்படி இருக்கும்?***

தன்னருகே வந்து நின்ற அந்த உயரமான வாலிபனைப் பவுல் அன்புடன் பார்த்தார். ஊருக்குச் செல்லுவதற்காகத் தயாராக உடை அணிந்து வந்திருந்தான். தோளில் பை தொங்கிக் கொண்டிருந்தது. பவுல், தான் எழுதிக்கொண்டிருந்த கடிதத்தில் தனது கையெழுத்தைப்போட்டு, அதைச் சுருட்டி, அந்த வாலிபன் ஒநேசிமுவிடம் கொடுத்தார்.

தயங்கி நின்ற ஒநேசிமுவைப் பார்த்தார். ‘‘இந்தக் கடிதத்தை உன் எஜமான் பிலமோனிடம் கொடு; உன்னைப்பற்றி



நல்லவிதமாக எழுதியிருக்கிறேன். நீ எனக்கு மகனைப் போன்றவன் என்று எழுதியுள்ளேன். முன்பு நீ உன் எஜமானுக்கு உண்மையாயிருக்கவில்லை. ஆனால், என்னுடன் நீ தங்கியிருந்த சில மாதங்களில் நீ எனக்கு மிகவும் உதவியாயிருந்தாய். இப்போது நீ இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரை நேசிக்கிறாய்; எனவே, எனக்கு நீ சேவைசெய்தது போன்று இனி உன் எஜமான் பிலமோனுக்கும் செய்வாய் என எனக்குத் தெரியும்.’’

மேலும் பவுல் ஒநேசிமுவிடம், ‘‘நீ உன் எஜமானை விட்டு ஓடியதினிமித்தம் உன்மேல் அவருக்குக் கோபமும் மிகவும் வருத்தமும் இருக்கலாம்; ஆனால், எனக்கு நீ உதவியதுபோல இனி அவருக்கும் உதவிசெய்வாய் என்று நான் பிலமோனுக்கு எழுதியுள்ளேன். மேலும் இப்போது நீ இயேசுவை ஏற்றுக்கொண்டிருப்பதால், இனி நீ அடிமையல்லவென்றும் கிறிஸ்துவுக்குள் சகோதரன் என்றும் எழுதியிருக்கிறேன்’’ என்று பவுல் சொல்லிக்கொண்டிருந்தபோது,

## மனன வசனம்

**மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல் கர்த்தருக்கென்றே... செய்யுங்கள்.**

**எபேசியர் 6:7.**

தன் கைகளால் பவுலை ஒநேசிமு அணைத்துக்கொண்டான். அவனது தலை கீழ்நோக்கிக் கவிழ்ந்திருந்தது. கண்களிலிருந்து கசிந்த கண்ணீரைப் பவுலுக்குத்தெரியாமல் துடைத்தான். தான் அவ்வாறு அழுவது யாருக்கும் தெரியாது என்று நினைத்துக்கொண்டான்.

"இன்னும் ஒன்று . . . ", என்றவாறு ஒநேசிமுவின் கைகளைப் பிடித்தார் பவுல்.

ஒநேசிமு, "நீ உன் எஜமானுக்குக் கொடுக்கவேண்டிய கடனை உன்னிடம் அவர் கேட்கமாட்டார்; ஏனெனில், நான் அக்கடனைச் செலுத்திவிடுவதாக எழுதியுள்ளேன். அவருக்குச் சொல்லிக்கொடுத்திருக்கிறேன். எனவே, அவர் எனக்காக எதையும் செய்வார்; உன்னை மறுப்பின்றி விருப்பமாக ஏற்றுக்கொள்வார். ஆதலால் நீ எதற்கும் தயங்காமல் தேவனை நம்பி, தைரியமாகப் போ" என ஆறுதலாகக்கூறி வாசல்வரை வந்து வழியனுப்பினார். மனம் நெகிழ்ந்த ஒநேசிமு பவுலின் கைகளைப் பிடித்துக்கொண்டான். "உங்களுக்கு நான் எப்படி என் நன்றியைச் சொல்லுவேன்: ஒருபோதும் நான் உங்கள் அன்பையும் உதவியையும் மறக்கமாட்டேன்" என்று கூறினான். பவுலை விட்டுப் பிரிய அவனுக்கு மிக வேதனையாக இருந்தது.

"வருத்தப்படாதே, போய், உன் எஜமானுக்குக் கீழ்ப்படிந்திருந்து, எனக்கு உதவியது போல் அவருக்கும் உதவியாயிரு; உண்மையான கிறிஸ்தவர்கள் அப்படித்தான் செய்வார்கள்; என் மகனே! நீ திரும்பிப் போய் உன் எஜமானனிடம் வேலை செய்ய ஆயத்தமாயிரு.

"என்றைக்கேனும் ஒருநாள் நீயும் என்கூடவே இருப்பாய்; மீண்டும் வந்து எனக்கு நீ உதவியாய் இருப்பாய்" எனக் கனிவாகப் பேசினார். பின்னர் அவனது தோளை அன்புடன் தட்டிக்



## செய்தி

**வீட்டிலும் நான்**
**தேவனுக்குச் சேவைசெய்யமுடியும்.**

கொடுத்து வழியனுப்பினார்.

அதுவுமன்றி அவனிடம், "உன்னை நான் இங்கேயே எனக்கு உதவியாக வைத்துக் கொள்ள முடியும்; ஆனாலும் நீ முதலில் உன் எஜமானுக்கு உதவியாயிரு. அதுவே சரியானது; ஒருவேளை அவரேகூட உன்னை இங்கே அனுப்பி வைக்கலாம்" என்று சொன்னார். அவன் வெளியே நடக்க ஆரம்பிக்கும்போதும், "எனக்கு வீட்டில் ஒரு அறையை ஆயத்தம் பண்ணச்சொல்லியிருக்கிறேன்; கர்த்தருக்குச் சித்தமானால் நான் உங்கள் இருவரையும் பார்க்க விரைவில் வருவேன்" என்றும் சொன்னார்.

பின்னால் திரும்பிப்பார்த்துக் கைகளை அசைத்தவாறே ஒநேசிமு சென்றான். கண்ணீர் கண்களில் திரையிட்டது.

என் செல்லமே, நீயும் பவுலைப்போல மற்றவர்களமீது அன்பு காட்டுகிற பிள்ளையாக வாழ்வாயா?

*செய்முறை:* **இந்தவார மனப்பாட வசனத்தை மீண்டும் வாசியுங்கள். பிறகு, கீழே கோடிட்டுள்ள இடங்களை நிரப்புங்கள்.**

## புதிர் 3

**மனுஷருக்கென்று**

______________________________

**கர்த்தருக்கென்று**

______________________________